## கிறிஸ்து பிறப்புக் காலம்
## டிசம்பர் 25
## ஆண்டவருடைய பிறப்பு பெருவிழா

## திரு விழிப்புத் திருப்பலி

**"ஒளி நம்மை அமைதியில் ஒன்றுகூட்டும் போது"**

**"ஆயுதங்கள் அமைதியான இரவு"**

### முன்னுரை

அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே,

இருள் அகற்றும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் ஒளி நம் அனைவரையும் அமைதியின் வழியில் இவ்வாலயத்திற்கு அழைத்து வந்துள்ளது. இந்தப் புனிதமான இறை வழிபாட்டில் பங்கேற்க வந்துள்ள உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன் .

கிறிஸ்து பிறப்பு நாள் இரவில், கடலோரத்தில் உள்ள ஒரு சிற்றூரை, கடுமையான புயல் ஒன்று தாக்கியது. சூறாவளி காற்று சுழன்று அடிக்க, கடல் அலைகள் ஆர்ப்பரித்து எழ, வீடுகளை வெள்ளமும், இருளும் சூழ்ந்தது. என்ன நடக்குமோ என்ற அச்சத்தில் மக்கள் உறைந்து போயிருந்தார்கள். அந்த இருளின் நடுவில், அந்த ஊரில் உள்ள சிற்றாலயத்தில் இருந்தவர்கள், மெழுகுதிரிகளை ஏற்றி ஒவ்வொரு சன்னல்களிலும் வைத்தார்கள். அந்த ஒளியைப்பார்த்த அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும், அவ்வாறே செய்ய, சிறிது நேரத்தில் அத்தெருவு முழுவதும் இதமான ஒளியால் நிறைந்தது. மக்கள் ஒருவர் ஒருவரைச் சந்தித்து உணவுகளை பரிமாறி, கிறிஸ்து பிறப்பு பாடல்களை பாடத் தொடங்கினார்கள்.

இத்தகைய பயம் நிறைந்த சூழலில் மக்கள் ஒன்றை ஆழமாக உணர்ந்தார்கள். கிறிஸ்து பிறப்பு நன்னாளின் ஒளி எத்தகைய இருளிலும் ஒளிரும்; அது மனித இதயங்களை எதிர்நோக்கிலும், அன்பிலும், அமைதியிலும் இணைக்கும் என்று. இந்த புனித இரவில் பல்வேறு பின்னணிகளைக் கொண்ட நாம் ஒன்றாய் இணைந்து வந்துள்ளோம். இந்த இறைவழிபாட்டு கொண்டாட்டத்தின் வழியாக, இயேசுவின் பிறப்பு கொண்டுவந்த அமைதியும், ஒற்றுமையும் நம்மை நிறைக்க நம் இதய குடில்களை திறந்து வைப்போம்.

### பாவமன்னிப்பு வழிபாடு / பாவத்துயரச் செயல்

சகோதர, சகோதரிகளே,

உலகின் ஒளியாம் இயேசுவை, நம் உள்ளத்தில் வரவேற்பதற்கு தடையாக நமக்கு, உள்ளும் புறமும் உள்ள பாவ இருளை நினைத்துப் பார்ப்போம். நமது உள்ளங்களை தூய்மையாக்க இறைவனின் இரத்தத்தை இறைஞ்சுவோம்.

இருள் சூழ்ந்த எங்கள் வாழ்வில் ஒளி ஏற்ற வரும் ஆண்டவரே இரக்கமாயிரும்.

ஆண்டவரே இரக்கமாயிரும்.

இறைவனோடும், எங்களை ஒருவர் ஒருவரோடும் ஒப்புறவாக்க பிறந்த கிறிஸ்துவே இரக்கமாயிரும்.

கிறிஸ்துவே இரக்கமாயிரும்.

உடைந்த உள்ளங்களை குணப்படுத்துபவரும், சிதறுண்டதை தேடிச் சேர்ப்பவருமான ஆண்டவரே இரக்கமாயிரும்.

ஆண்டவரே இரக்கமாயிரும்.

இரக்கம் நிறைந்த இறைவன், பெத்லகேமில் பிறந்த தம் திருமகனின் ஒளியால், நம் பாவங்களை மன்னித்து, நம்மை இருளில் இருந்து விடுவித்து, நம் உள்ளங்களை ஒளிர்வித்து, நம்மை மன அமைதிக்கும், முடிவில்லா வாழ்விற்கும் அழைத்துச்- செல்வாராக. ஆமன்.

## வானவர் கீதம் பாட அழைப்பு

அன்று பெத்லகேமில் காணம் பாடிய வானகத் தூதர் அணிகளோடு நாமும் ஒன்றிணைந்து, இன்று இந்த புனித இரவில் மகிழ்ந்து, ஒரே குரலாக, விண்ணகத்திலே இறைவனுக்கு மாட்சி உண்டாக என பாடுவோம்.

உன்னதங்களிலே இறைவனுக்கு பாடல்...

## திருமுழுக்கு மன்றாட்டு

எங்கள் வாழ்வின் வைகறையான இறைவா, இந்த புனிதமான இரவில், என்றும் வாழும் வார்த்தையான உமது திருமகனை எங்களோடு வாழ்வதற்காக வழங்கினீர். பல்வேறு சூழல்களில் வாழும் உமது பிள்ளைகளாகிய எங்களை, அன்பிலும், அமைதியிலும் ஒன்றிணைத்து ஒரே குடும்பமாக சேர்த்தருளும்.

எங்களது கல்லான இதயங்களை கனிவுள்ளதாக்கி, உமது திருமகனின் பிறப்பு கொண்டு வந்த தெய்வீக ஒளியால் எங்களது வாழ்க்கையை நிரப்பியருள வேண்டுமென்று, எங்கள் ஆண்டவரும், இன்று எங்களுக்காகப் பிறந்திருக்கும் உமது திருமகனுமாகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## வாசகங்கள்

எசா 62: 1-5; திப: 13: 16 - 25; மத் 1: 1 - 25

## மறையுரை

## "ஒளி நம்மை அமைதியில் ஒன்றுகூட்டும் போது"

### ஆயுதங்கள் அமைதியான இரவு

1914 ஆம் ஆண்டு ஐரோப்பாவில் முதலாம் உலகப் போர் நடந்துகொண்டிருந்தது. ஒரு கிறிஸ்து பிறப்பு விழா இரவில் , பிரான்ஸ் நாட்டின் வடபகுதிகளில் இருந்த பதுங்கு குழிகளில் படைவீரர்கள் குளிரில் அடைந்து கிடந்தார்கள். அந்த இருளில், "அமைதியான இரவு, புனிதமான இரவு" என்ற கிறிஸ்து பிறப்பு பாடலை ஒருவர் பாடத் தொடங்கினார். ஒருவர் பின் ஒருவராக மற்றவரும் அவரோடு இணைந்தார்கள்.எதிரிகளான அவர்கள் பதுங்கு குழிகளை விட்டு வெளியே வந்தார்கள்; தங்களது துப்பாக்கிகளை கீழே போட்டார்கள்;ஒருவர் ஒருவரை சந்தித்து கைகுலுக்கி, உணவையும் , சிறிய பரிசுபொருட்களையும் பகிர்ந்து கொண்டார்கள்; சிறிது நேரம் கால்பந்துகூடா விளையாடி மகிழ்ந்தார்கள். இந்தக் கண்கொள்ளா காட்சியைப் பற்றி தன் வீட்டிற்கு கடிதம் எழுதிய ஒரு இளம் இங்கிலாந்து இராணுவ அதிகாரி பின்னாளில், பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "அதுவரை ஒருவரையொருவர் துப்பாக்கியால் தாக்கிக் கொண்டிருந்தவர்கள், அன்போடும், சமாதானத்தோடும் ஒன்று கூடி வந்தது, ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது". ஒரு குறுகிய நேரத்தில், இந்த உலகம் உணர்ந்து கொண்டது, கிறிஸ்து பிறப்பு விழா என்றால் என்ன என்று:

அது கிறிஸ்துவின் ஒளி இந்த உலகின் இருளை தகர்க்கிறது.

பகைவர்களை ஒரே குடும்பமாக ஒன்றிணைக்கிறது.

நாம் அனைவரும் இறைவனால் அரவணைக்கப்படுகின்ற ஒரே மனித குலம், என்பதை நமக்கு நினைவு படுத்துகின்றது.

### 1. இறைவன் தன் மக்களை ஒன்று கூட்டுகிறார்

இன்று இரவு நாமும் ஒன்று கூடி வந்துள்ளோம். போர்க்கால பதுங்கு குழிகளில் இருந்து அல்ல, மாறாக பணிச்சுமை, உடைந்த உள்ளங்கள், சோர்வடைந்த மனங்கள் போன்ற பதுங்கு குழிகளில் இருந்து. நம்பிக்கை கொண்டவர்களை காலகாலமாக ஒன்றிணைத்தது போல, கிறிஸ்து பிறப்பு இரவு, நம்மையும் ஒன்று ஊட்டி சேர்த்துள்ளது. இன்றைய முதல் வாசகத்தில் எசாயா இறைவாக்கினர் இறைவன் பாழடைந்த அடைந்த இஸ்ராயேல் குலத்தை எவ்வாறு மாட்சிமைக்குரியதாக்கினார் என்பதைப் பற்றி குறிப்பிடுகின்றார். நீ என்னுடைய மகிழ்ச்சி என அழைக்கப்படுவாய் என்று கூறுகிறார். கடவுள் தன் மக்களை கைவிட மறுக்கிறார். இரண்டாவது

வாசகத்தில், இறைவன் இஸ்ராயேல் மக்களுக்கு ஒரு மீட்பரை வழங்குவதாக கொடுத்த வாக்குறுதி நிறைவேறும் வரை, எவ்வாறெல்லாம் படிப்படியாக வழிநடத்தினார், என்பதை பவுலடிகள் குறிப்பிடுகிறார். வரலாறு என்பது தற்செயலாக நிகழ்கின்ற சில நிகழ்வுகளின் தொகுப்பு அல்ல, மாறாக அது ஒரு இரக்கத்தின் வரலாறு என்பதை பவுலடிகள் தெளிவுபடுத்துகிறார். நற்செய்தி இந்த இரக்கத்திற்கு ஒரு இறவாமுகத்தை கொடுக்கின்றது. அந்த முகம் தான் எம்மானுவேலாக, மரியின் மகனாக, நம்மோடு வாழ வந்த இறைமகன் இயேசு கிறிஸ்து. நற்செய்தியில் நாம் கேட்ட மூதாதையர் பட்டியல் நமக்கு புரியாமல் இருக்கலாம். ஆனால் அது இறைவன், இந்த உலகின் மீட்பு வரலாற்றில், தலைமுறை தலைமுறையாக, எவ்வளவு பொறுமையோடு செயல்படுகின்றார்; அவரின் இந்த மீட்பு திட்டத்தில் புனிதர்களை மட்டுமல்ல, பலவீனர்களையும் இணைத்துக்கொள்கின்றார், என்பதை தெளிவுபடுத்துகிறது . உடைந்த உள்ளங்களைக் கூட, அருளின் கருவிகளாக மாற்றி இருக்கிறார். இன்றைக்கு நாமெல்லாம் ஒன்று கூடி வந்திருக்கிறோம் என்றால் அது நாமெல்லாம் நிறைவானவர்கள் என்பதனால் அல்ல, அது கடவுள் நம்மை அவரது அன்பால், அவரது குடும்பமாய் தேர்ந்து கொண்டதாலே.

## 2. ஒப்புரவுக்கு அழைக்கும் கிறிஸ்து பிறப்பு

நாம் முன்னுரையில் கேட்டது போல, 1914 ஆம் ஆண்டு முதல் உலகப் போரின் போது நடந்த அந்த நிகழ்ச்சி ஒரு உணர்வு பூர்வமான நிகழ்ச்சி மட்டுமல்ல, இறைமகன் இயேசு நமது உள்ளத்தில் வரும்போது என்ன நடக்கின்றது என்பதை காட்டுவதாகவும் அமைகிறது. பிரிந்ததை சேர்க்கும் பாலமாக கிறிஸ்து பிறப்பு அமைகிறது. பகைவர்களையும், நண்பர்களாக பார்க்க அழைக்கிறது. பதுங்கு குழிகளில் இருந்து போரிடும் உலகமாக மட்டுமல்ல இல்லை இன்றைய உலகம், மாறாக, நம் இதயங்கள் பயம், பொறாமை, வெறுப்பு போன்ற தடைச்சுவர்களால் சூழப்பட்டதாகவும் இருக்கிறது. குடும்பங்கள் பிளவுபட்டும், அண்டைவீட்டார்கள் பகைவர்களாகவும், நம்பிக்கை நலிபுற்றதாகவும் இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு கிறிஸ்து பிறப்பு விழாவும் நம் காதோரம் சொல்கிறது: அஞ்சாதே, உனக்காக ஒரு மீட்பர் பிறந்துள்ளார். போர்க்களங்களை அமைதியான இடமாக்கக் கூடிய கடவுள், நம்முடைய உள்ளங்களிலும், இல்லங்களிலும் இருக்கின்ற நீண்டகால மனக் கசப்புகளை மாற்றமாட்டாரா? ஆற்றமாட்டாரா? கிறிஸ்து பிறப்பு என்பது ஒரு கடந்த கால நிகழ்ச்சியை நினைவுகூறும் ஒன்று மட்டுமல்ல, அது கிறிஸ்துவை நம்முடைய உறவுகளில், நம்முடைய மன்னிப்பில், நம்முடைய இரக்கத்தில் மீண்டும் புதிதாக பிறக்கச் செய்வது. நற்செய்தியில் நாம் பார்த்த புனித யோசேப்பைப் போல, நம்முடைய இறைவனுடைய திட்டம் நமக்கு முழுவதும் புரியாமல் இருந்தாலும், அதற்கு

அடிபணிய அழைக்கப்படுகின்றோம்; அரக்கத்தனத்திற்கு பதிலாக இரக்கத்தையும், தீர்ப்பிடுதலுக்கு பதிலாக கனிவையும், கட்டுபாடுகளுக்குப் பதிலாக அன்பையும் தேர்ந்து கொள்வோம். தூய யோசேப்பின் "ஆம்" என்ற அமைதியான வார்த்தை, மீட்பர் இந்த உலகில் பிறக்க வழிவகுத்ததை போல , நம்முடைய "**ஆம்**" என்ற வார்த்தையும், இன்றைக்கு இறைவன் மீண்டும் இந்த உலகத்திற்கு வர வழி வகுக்கட்டும்.

### 3. இருளில் ஒளிரும் ஒளி

இந்த இரவு திருப்பதலி முடிந்து நாம் வெளியே செல்லும்போது தெருக்களிலும் வீடுகளிலும் விளக்குகள் ஒளிர்வதைப் பார்க்கலாம். ஆனால், அவற்றிலிருந்து வருவது உண்மையான ஒளி அல்ல ; உண்மையான ஒளி, பெத்லகேமில் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த குழந்தையிடமிருந்து வருகிறது. தூய யோவான் நற்செய்தியாளர் சொல்வதைப் போல "ஒளி இருளில் ஒளிர்ந்தது, இருள் அதை மேற்கொள்ளவில்லை". இயேசு கிறிஸ்து என்னும் ஒளி இருளை அகற்றுவதில்லை; மாறாக அதற்குள் ஒளிர்ந்து அதனை உருமாற்றுகிறது.

அது போலவே கடவுள் வலுவில்லாத, பிறரது அரவணைப்பை, அன்பை நாடுகின்ற குழந்தையாக வருகிறார். கடவுள் இந்த உலகத்திற்கு இடியைப் போல அல்ல, மாறாக இதமாக வருகிறார்; படையோடு வரும் அரசனைப் போல அல்ல, மாறாக இரு கரங்களை விரித்த குழந்தை போல வருகிறார். இதுதான் தூய்மையான அருள், நமது தகுதியையும் தாண்டி, நமக்காக பொங்கி வருகின்ற அன்பு. இந்த அன்பை விலைக்கு வாங்க முடியாது; தாழ்ச்சியோடு வந்து, மண்டியிட்டு வணங்கிய இடையர்களைப் போல, நாமும் மண்டியிட்டு வணங்கி மட்டுமே அதனை பெற்றுக்கொள்ள முடியும். பெற்று அந்த அன்பின், அருளின் ஒளியை பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு மெழுகுதிரியும் மற்றொரு திரியை ஏற்றவேண்டும். அதுபோலவே, கிறிஸ்துவால் தொடப்பட்ட ஒவ்வொரு இதயங்களும் அவருடைய ஒளி விளக்காக இந்த உலகில் ஒளிர வேண்டும்.

### 4. ஜன்னலில் ஏற்றப்பட்ட மெழுகுதிரி

கிறிஸ்து பிறப்பு இரவன்று, வீட்டு ஜன்னல்களுக்கு பக்கத்தில் மெழுகுதிரி ஒன்றை ஏற்றிவைக்கின்ற வழக்கம் அயர்லாந்து நாட்டில் உண்டு. பயணத்தில் இருப்பவர்களுக்கு: இங்கே ஒரு அறை உண்டு, உங்களுக்காக ஒரு வீடு திறந்திருக்கிறது என்று வரவேற்பதின் அடையாளமாக அது திகழ்ந்தது.

கிறிஸ்து பிறப்பு விழா நமக்கு கொடுக்கும் நற்செய்தி :

எவ்வளவு இருள் நம்மை சூழ்ந்த போதும், நம்மில் ஒருவரையும் இறைவன் மறப்பதில்லை.

அவரால் ஆற்றப்படமுடியாத மனகாயங்கள் இல்லை: அவரால் மீட்கப்பட முடியாத குடும்பங்கள் இல்லை என்பதையே.

எனவே இந்த ஆலயத்தை விட்டு செல்லும்போது நாம்

ஒளி தீபங்களாக செல்வோம்;

குடும்பங்களில் சமாதான தீபத்தை ஏற்றுபவர்களாக,

இந்த உலகத்தில் அமைதியை என்னும் ஒளியை ஏற்படுத்துபவர்களாக இருப்போம்.

இந்த இரவில், வார்த்தை மனுவுருவானார்; அவர் நம்மோடு வாழ்கின்றார் ;

இருளில் வாழ்ந்தமக்கள் பேரொளியை கண்டனர்.

ஒவ்வொரு இரவும் கிறிஸ்து பிறப்பு இரவாக ஒளிரும் வரை, கிறிஸ்துவின் ஒளி நம்வழியாக ஒளிரட்டும்.

ஆமென்.

## நம்பிக்கை அறிக்கைக்கான அழைப்பு

மரியா, யோசேப்பு, வானக தூதரணிகள், இடையர்கள் இவர்களோடு சேர்ந்து, நம்மைப் போல ஒருவரான இறைவன் மீது கொண்ட நமது நம்பிக்கையை அறிக்கையிடுவோம்.

## காணிக்கை மன்றாட்டு

விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே,

உமது அருட்கொடையின், மற்றும் எங்களது நன்றியின் அடையாளமுமான இந்த காணிக்கைகளை ஏற்றுக்கொள்ளும். இந்த அப்பம் கிறிஸ்துவின் உடலாகவும், திராட்சை இரசம், அவரது அமைதியின் இரத்தமாகவும் மாறுவதைப் போல, நாங்களும், உமது அன்பில் ஒரே குடும்பமாக மாற, எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## விண்ணக தந்தையே மன்றாட்டுக்கு அழைப்பு

அன்னை மரியா, அவரது கணவர் யோசேப்பு, அவர்கள் வழியாக பெத்தலகேம் ஊரிலிருந்து வந்த அமைதி, ஆகியவற்றோடு ஒன்றிணைந்து ஆண்டவர் நமக்கு கற்றுக்கொடுத்ததைப் போல தந்தையாம் இறைவனைப் பார்த்து மன்றாடுவோம்

## அமைதிக்கான மன்றாட்டு

அமைதியான பெத்லகேமில் அவதரித்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே,

அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கின்றேன், என் அமைதியை உங்களுக்கு தருகிறேன் என்று உமது நண்பர்களுக்கு மொழிந்தீரே:

எங்களுடைய பயத்தையும், தவறுகளையும் கண்ணோக்காமல் உமது திரு அவையின் எதிர்நோக்கையும், ஏக்கத்தையும் கண்ணோக்கியருளும்;

எங்களை பிரிவுபடுத்தும் காயங்களை குணமாக்கும்,

எங்கள் இதயங்களை கலங்கடிக்கின்ற புயல்களை அமைதிப்படுத்தும்;

இந்த உலகம் தர முடியாத அமைதியை உம்மோடு ஒன்றிணைக்கும் அன்பை, மன்னிப்பில் மலரும் அமைதியை,எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று, உம்மை மன்றாடுகின்றோம்.

## திருவிருந்துக்கான அழைப்பு

இதோ இறைவனின் செம்மறி; அனைத்துலகையும் அமைதியில் அரவணைக்கும் ஒளி. செம்மறியின் திருவிருந்துக்கு அழைக்கபெற்றோர் பேறுபெற்றோர்.

## திரு விருந்தின் போது தியானிக்க

வார்த்தை மனுவுருவானார்; அவர் நம்மிடையே குடி கொண்டார். விண்ணில் இருந்து அல்ல, மண்ணில் உள்ள ஒரு குடிலிலிருந்து இறைவன் இன்று இரவு நம்மோடு பேசுகிறார்.எட்டாத உயரத்தில் இருப்பவர் அல்ல அவர், அன்பால் தொடக்கூடிய தூரத்தில் இருக்கிறார். குடிலில் உள்ள தீவன தொட்டி தான் நம் இறைவனின் திறந்த இதயம். அதில் இளைப்பாறி, அவரின் அமைதியில் புத்துணர்வு பெற்று எழுவோம்.

## திருவிருந்துக்குப் பின் இறைவேண்டல்

இறைவா, எங்களுக்கு மத்தியில் பிறந்த உமது திருமகனின் விண்ணக உணவை நாங்கள் பெற்றுக் கொண்டோம். எங்களது உள்ளத்தில் ஒளிரும் அவரது ஒளியால் அமைதியின் தூதுவர்களாகவும், மகிழ்ச்சியின் சாட்சிகளாகவும் இந்த உலகிலும், எங்கள் இல்லங்களிலும் வாழ்ந்திட வரமருளும்.

## இறுதி ஆசீர்

உதயத்தின் இறைவன் உங்கள் உள்ளத்தின் இருளகற்றி அதனை தன் அன்பின் ஒளியால் நிரப்புவாராக. ஆமென்

பெத்லகேமில் பிறந்த குழந்தை, உங்கள் இல்லங்களில் வாழ்ந்து, இவ்வுலகத்தால் தர முடியாத மன அமைதியை உங்களுக்கு அருள்வாராக. ஆமென்

இடையர்களையும், அரசர்களையும் ஒன்று கூட்டிய இறைவனின் ஆவி, உங்களையும் ஒற்றுமையில் ஒன்று கூட்டி, இன்றைக்கும், என்றைக்கும் மனம் மகிழச்செய்வாராக. ஆமென்

**எல்லாம் வல்ல இறைவன் தந்தை மகன் தூய ஆவி + உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்**

உங்களது வாழ்வால் இறைவனை மாட்சிபடுத்தி, கிறிஸ்து பிறப்பு விழாவின் ஒளியை பிறரோடு பகிர்ந்து வாழ, சென்று வாருங்கள் திருப்பலி நிறைவுபெற்றது.

**உள்ளத்தில் எடுத்துச் செல்ல சிந்தனை ஒன்று**

இறைவன் இந்த உலகத்திற்கு வருவது மட்டுமல்ல கிறிஸ்து பிறப்பு விழா;

இறைவனின் ஒளி நம் உள்ளத்தில் ஏற்றப்படும் போதும்தான். எந்த ஒரு இருளோ, வலியோ, அச்சமோ அதை மேற்கொள்ளாதிருக்கட்டும்.

**தயாரிப்பு :**

**அருள் முனைவர் பால் ஜூலியன், ஆஸ்திரேலியா**

**மேலும் விவரங்களுக்கு காண்க....**

**www.virginofrevelationaustralia.com**